அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 11/2026

எனது இலக்கம் : EST-4/03/PMT/0201(I)
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.04.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பொதுக்கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபை தலைவர்கள்

**<u>2026 வரவு செலவுத்திட்டத்திற்கமைய, அரச பிரிவுகளின் நிறுவனங்களின் பொருட்டு தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குதல்.</u>**

2026 வரவுசெலவு முன்மொழிவின் மூலம் வெளியிடப்பட்டவாறு, அரச பிரிவுகளின் நிறுவனங்களில் தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தொடர்பாகவும் மற்றும் தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையில் சேவையில் ஈடுபட்டு, சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய, நிரந்தர நியமனம் கிடைக்கப் பெற்றிருப்பினும், அந் நியமனம் முறையற்றதாகவுள்ள ஊழியர்கள் தொடர்பாகவும் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, 2026.04.27 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் 25/2014 மற்றும் 25/2014(I) மீண்டும் அமுல்படுத்தப்பட்ட, 2019.09.18 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 29/2019 இற்கமைய, 2019.09.01 ஆந் திகதிக்கு, பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, இதுவரையிலும் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு அத்திகதி தொடக்கம் செயற்படும் வகையில் நிரந்தர நியமனங்களை வழங்குதல் வேண்டும். இதன் போது,

I. 2019.09.01 ஆந் திகதிக்கு 180 வேலை நாட்களை, திருப்திகரமாகவும் மற்றும் தொடர்ச்சியான சேவைக் காலத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (முறையான விடுமுறை நாட்கள் மற்றும் அரச விடுமுறை நாட்களினால் சேவையில் தடங்கல் ஏற்படாது.)

II. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 25/2014(I) மீண்டும் அமுல்படுத்தப்பட்ட, அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 29/2019 சுற்றறிக்கைகளுக்கமைய, உரிய பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

III. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ள, சேவைகள் வகுதிக்குரியதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், 2019.09.01 ஆந் திகதிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பதவியிலேயே/நிறுவனத்திலேயே ஒரே சம்பள அளவுதிட்டத்தினுள் தற்போதைக்குத் தொடர்ச்சியாகச் சேவையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

IV. 2019.09.01 ஆந் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் நடைமுறைப்படுத்தப்படினும், இச்சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் நிலவினால் மட்டும், உரிய வெற்றிடங்களைக் கருத்திற் கொண்டு, நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு மேற் கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும், அனுமதிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் இல்லையெனில், பதவியை வகிப்பவருக்குத் தனிப்பட்டதான வகையில் நிரந்தர நியமனத்தை நடாத்திச் செல்லுதல் வேண்டும் என்பதுடன், அப்பதவியை வகிப்பவர் வேறு சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதால், பதவி உயர்வினால், ஓய்வு பெறுவதால், பதவியிலிருந்து விலகுவதால் அல்லது வேறு காரணத்தால் வெற்றிடம் ஏற்படுமாகும் போது, அப்பதவி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

V. பதவி வகிப்பவருக்குத் தனிப்பட்டதான முறையில் குறித்த நிரந்தர நியமனம் வழங்கியுள்ள போது, குறித்த நிரந்தரப் பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில், புதிய ஆட்சேர்ப்பு செய்யப்படலாகாது

என்பதுடன், இவ் ஊழியர்கள், குறித்த வெற்றிடங்களுக்கு இணக்கம் செய்வது முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

VI. நிலுவை சம்பளக் கொடுப்பனவுகள் இன்றி, உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் விடுமுறைகள் என்பன நிரந்தர நியமனம் நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து நிரந்தர நியமனத்திற்கு ஏற்புடையதானவாறு திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

VII. 2014.12.29 ஆந் திகதி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014(I) இற்கமைய, கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்கு செய்து, நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு நிறுவனத்தின் தலைவரினால் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

03. இச்சுற்றறிக்கைக்கமைய, நிரந்தர நியமனங்களை வழங்கும் ஊழியர்கள் தொடர்பாக இணைப்பு 01 மற்றும் இணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம், அவ்அவ் நிறுவனங்களின் அலுவலக ஆளணியினரை அனுமதிக்கும் பொருட்டு முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்குத் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நிறுவனங்களின் தலைவர்களினால் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

04. மேற்படி 02 இன் படி, நிரந்தர நியமனங்களை வழங்கும் ஊழியர்களுக்கு அவர்களின் பதவிகளில் உறுதிப்படுத்தும் பொருட்டு தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்கி, இச்சுற்றறிக்கையை வெளியிட்ட திகதி தொடக்கம் 01 வருட காலத்தினுள் சேவையில் உறுதிப்படுத்தலை வழங்குதல் வேண்டும் என்பதுடன், இதுவரையில் தொடர்ச்சியான சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தகுதிகாண் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன்போது, 2310/29 என்னும் இலக்கமுடைய 2022.12.14 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரகாரம், பின்னிணைப்பு 03 இன் VII ஆம் அத்தியாயத்தின் 89 மற்றும் 90 ஆம் பிரிவுகளுக்கமைய, வழங்கப்படும் முறையான நியமனக் கடிதத்தின் தொடரிலக்கம் 06 இன் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்களின் பொருட்டு, “இவ் நியமனம் 2019.09.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதால், அன்றைய திகதி தொடக்கம் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி வரையிலான காலப்பகுதி தகுதிகாண் காலமாகக் கருதப்படும்” எனப் பொருத்தமானவாறு உட்படுத்துதல் வேண்டும்.

05. மேற்படி 02 இன் பிரகாரம் நிரந்தர நியமனங்கள் வழங்கியதன் பின்னர் திணைக்கள ரீதியான பதவிகளில் மேலதிகமாகவுள்ள ஊழியர்களுக்கு வேறு நிறுவனமொன்றில் உள்ள வெற்றிடங்களின் பொருட்டு இணைத்துக் கொள்வதற்கு உள்ள வாய்ப்புக்கள் தொடர்பாக ஆரய்ந்து பார்த்து, பொருத்தமான நடைமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / நிறுவனத் தலைவர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அறிக்கையிடல் வேண்டும்.

06. இணைந்த சேவைக்குரிய ஆரம்ப சேவைகள் வகுதியின் பதவிகளில் தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் சேவையாற்றிய ஊழியர்களின் பொருட்டு முறையான நியமனக் கடிதங்களை வழங்குவதற்கும் மற்றும் சேவை நிலையங்களில் உள்ள இணைந்த சேவைக்குரிய பதவிகளில் நிரந்தர நியமனங்களைப் பெற்றுக் கொள்ளும் மேலதிக ஊழியர்களை வேறு வெற்றிடங்கள் நிலவும் சேவை நிலையங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் கையளிக்கப்படுகின்றது.

07. 2014.11.12 ஆம் திகதி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 2014.12.29 ஆந் திகதி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014(I) இற்கமைய, நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டு, பதவிகளின் அனுமதியின் பொருட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு நிறுவனங்களின் தலைவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோள்கள் தொடர்பாக, மேலும் பதவிகளின் பொருட்டு அனுமதி வழங்க வேண்டியிருப்பின், அதன் பொருட்டு தேவையான அனுமதியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் துரிதமாக வழங்குதல் வேண்டும்.

08. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 25/2014(I) மீண்டும் அமுல்படுத்தப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 29/2019 என்னும் சுற்றறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு மாறாக நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதால், மீண்டும் இச்சுற்றறிக்கமைய நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு இயலாதுள்ள ஊழியர்கள் தொடர்பாகப் பின்வருமாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

I. தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்மைய தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின்

பேரில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள திகதிக்கு 45 வயதுக்கு மேற்படாத ஊழியர்களின் பொருட்டு சுற்றறிக்கமைய நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டிய திகதி அல்லாத வேறு திகதியில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ள, சுற்றறிக்கைகளுக்கமைய ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களின் நிரந்தர நியமனங்கள், முறையான நியமனமாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

II. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 மற்றும் 25/2014(I) வெளியிடப்படுவதற்கு முன்னர் தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பினும், தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யும் சந்தர்ப்பத்தில், 45 வயதுக்கு மேற்பட்டிருந்த மற்றும் அதனை கருத்திற் கொள்ளாது, நிரந்தர நியமனம் வழங்கியுள்ள ஊழியர்களின் நியமனங்கள் அரச சேவைகள் சேமலாப நிதியின் கீழ் நியமனங்களாக அனுமானித்து மாற்றம் செய்து, அதற்கமைய சேவையின் இறுதியில் வழங்கப்படும் அனுகூலங்களைத் தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய நியமனமொன்றைப் பெற்று இதுவரையில் சேவையை முடிவுறுத்தி ஓய்வூதியம் கிடைக்கப் பெறாதுள்ள ஊழியர்களுக்கு அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் கீழ் நியமனத்திற்கு உரியதாக உரித்தாக வேண்டிய அரசப் பங்களிப்புப் பணம் மற்றும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டுள்ள விதவைகள், அனாதைகள் பங்களிப்புப் பணம் இருப்பின், அப்பணத்தை உத்தியோகத்தருக்கு ஒரே தடவையில் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

09. மேற்படி ஏற்பாடுகளின் படி நிரந்தர நியமனமொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தகைமைகள் பெற்றிருப்பினும், வேறு ஏதேனும் முறையில் அரசாங்கத் தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமற்றவராகவுள்ள எந்தவொரு ஆளொருவருக்கும் இச்சுற்றறிக்கையின் கீழ் நிரந்தர நியமனமொன்றை வழங்குதலாகாது.

10. இனிவரும் காலங்களில், உரிய பதவிகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாதுள்ள மற்றும் அனுமதிக்கப்பட்ட அலுவலக ஆளணிக்குப் புறம்பாக தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில், அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை விதி அல்லது சேவைகள் பிரமாணக் குறிப்புக்களுக்குப் புறம்பாக எவ்விதமான ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்படலாகாது. அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படின், அவ்வாறு செயற்படும் பொறுப்பு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, நியமன அதிகாரி மற்றும்/ அல்லது நியமனக் கடிதங்களுக்கு கையொப்பம் இடும் அதிகாரியினால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

11. இச்சுற்றறிக்கை பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.


ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112696478
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல்முகவரி : ad-2-est@pubad.gov.lk

**இணைப்பு 01**

**2019.09.01 ஆந் திகதிற்குத் தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குதல்**

அமைச்சு :..............................................
திணைக்களம் :..............................................
நிறுவனம் :..............................................

| நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களின் தகவல்கள் | | | தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்தல் | | நிரந்தர நியமனங்களை வழங்குதல் | |
|---|---|---|---|---|---|---|
| பெயர் | பிறந்த திகதி | தே.அ.அ. இலக்கம் | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவி | நியமனம் வழங்கப்பட்ட திகதி | பதவி |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**இணைப்பு 02**

**2026.04.30 ஆந் திகதிக்குத் தற்காலிக, அமய (நாளாந்த), பதிலீடு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிகள் தொடர்பில் தகவல்களைக் கோருதல்**

அமைச்சு / திணைக்களம் / நிறுவனம் ......................................................................................

| பதவிப் பெயர்<br><br>a | சம்பளக் குறியீடு<br><br>b | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2026.04.30 ஆந் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை<br><br>c | 2026.04.30 ஆந் திகதியில் நிலவும் உண்மைப் பதவிகளின் எண்ணிக்கை<br><br>d | வெற்றிடங்கள் (மேலதிகம்/ சோர்வு)<br><br>e<br>(c-d) | அ.நி.சு 11/2026 சுற்றறிக்கைகமைய சேவையில் உறுதிப்படுத்தலை வழங்கும் எண்ணிக்கை<br><br>f | மேலதிகம்/ சோர்வு (அ.நி.சு11/2026 ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர்)<br><br>g |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |